# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 198 of 2020** |
| Deposition of witness | : | **DW1** |
| Name | : | **பழனியம்மாள்** |
| Husband Name | : | **தங்கமுத்து கவுண்டர்** |
| Age | : | **67** |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10.02.2026*

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

12. பாகம் பிரித்தபின் நான் தற்போது குடியிருக்கும் எனது பங்கு இடத்தில் போர் போட்டு உள்ளேன் என்றால் சரிதான். எனது பங்கான 33 செண்ட் சுற்றிலும் கிலுவை வேலி எதுவும் தற்போது இல்லையென்றால் சரிதான், கம்பி வேலி உள்ளது. நேற்று குறுக்கு விசாரணையின் போது கம்பி வேலிக்கு கிழக்கு திசையில் எனது வீடு உள்ளதா என்று கேட்டபோது அதனை மறுத்துவிட்டு தற்போது எனது வீட்டை சுற்றிலும் கம்பி வேலி உள்ளது என்று முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல.

13. எனது இடத்தில் போர் போடுவதற்கு கிழமேல் தடத்தின் வழியாக வாகனம் வந்து பின்பு தென்வடல் தடம் வழியாக எனது பூமியை அடைந்து போர் போடப்பட்டது என்றால் சரியல்ல, பக்கத்து காட்டு வழியாக வாகனம் கொண்டுவரப்பட்டது. நான்கு புறமும் கம்பி வேலி உள்ளது என்று எனது சாட்சியத்தில் கூறியுள்ள நிலையில் நான் சொல்வது போல் போர் வாகனம் வேறு காட்டு வழியாக வந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல, போர் போட்ட சமயத்தில் கிழுவை வேலி தான் இருந்தது.

14. நான் சொல்வது போல் அருகில் உள்ள இடத்தில் ரைஸ் மில் உள்ளது என்றாலும் அதன் வழியாக போர் மெஷின் வந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியில்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட 33 சென்ட் இடத்தில் புதிதாக வடபுறத்தில் கேட் அமைத்து நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கென்று ஒரு பங்கு ஒதுக்கப்பட்ட பின்பு கூட நான் வாதியிடம் பிரச்சனை செய்து அது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் நான் அவ்வாறு எந்த பிரச்சனையும் செய்யவில்லை.

15. நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயரை கொண்டு சொத்தை அளக்க முற்பட்டபோது நான் வாதியின் தந்தையை தாக்கியதில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏற்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பின்பு தான், நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையரால் காவல்துறை பாதுகாப்புடன் கம்பி வேலி அமைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

16. எனது தரப்பில் தாக்கல் செய்த எதிர் உரையிலும், எனது சாட்சிய பிரமாண பத்திரிகையிலும் வாதி ஒரு ஏக்கர் பூமியை ஆக்கிரமித்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது விவசாய பூமிக்கு டிராக்டர் கிழமேல் தடம் மற்றும் தென்வடல் தடம் வழியாக தற்போதும் வந்து சென்று கொண்டிருக்கிறது என்றால் சரியல்ல. எனது எதிர் உரையிலும் பிரமாண பத்திரிகையிலும், வாதி, தடத்தை மட்டும் தான் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை அவர் ஆக்கிரமித்த அனைத்தையும்

சொல்லி உள்ளேன்.

17. நான் சொல்வதைப் போல் வாதி ஆக்கிரமித்துள்ளார் என்று காட்ட இதுவரையில் எனது தரப்பிலிருந்து நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் மூலம் இடத்தை அளப்பதற்கு ஏதேனும் மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. தற்போது  நிலத்தின் மதிப்பு உயர்ந்து உள்ளதால், 35 ஆண்டுகளுக்கு பின்பு வேண்டுமென்றே இடம் கேட்டு பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கிலும் நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. தடம் கிணற்றை ஒட்டி அமைந்துள்ளதால் நான் கூறுவது போல் வாதி தடத்தை ஆக்கிரமிக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.  நீதிமன்ற ஆணையரின் அறிக்கையிலும், வாதியின் விவசாய பூமி மற்றும்  கிணற்றுக்கு வடபுறம் தான் தென்வடல் தடம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் கிணற்றுக்கு வடபுறம் தடம் உள்ளது. கிணற்றுக்கு வடபுறம் உள்ள தடத்தில் தான் சென்று தெற்காக திரும்பி தென்வடல் தடத்தில் எனது பூமிக்கு செல்ல வேண்டும். எனக்கு பாத்தியப்பட்ட பூமி 1 ஏக்கர் 33 சென்ட் ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் வா.சா.ஆ.1 பாகசாசனம் ஆவணத்தின் படி எனக்கு ஒதுக்கப்பட்ட பூமி 33 சென்ட் மட்டுமே என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் இருந்து தடத்தை சுற்றிலும் உள்ள பூமியை வாதி உபயோகித்து வருவது ஊர்ஜிதம் ஆகியுள்ளது என்றாலும், அதற்கு நான் மறுப்பு தெரிவிக்காத காரணத்தினால் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன் என்றாலும் சரியல்ல.

19. வாதிக்கு செல்போன் டவருக்கு மின்சாரம் வழங்க நானும் இரண்டாம் பிரதிவாதியும் மறுப்பு தெரிவித்த போதும் அதனை பரிசீலித்த மின்சார வாரியம் அதை நிராகரித்து மின்சாரம் வழங்கியுள்ளது என்றால் சரிதான். நான்தான் நீதிமன்ற உத்தரவிற்கு பின்பும் பிரச்சனை செய்து வருகிறேன் என்றாலும், அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும், எனவே வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. மேலும் வாதிக்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட இடைக்கால உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டு உத்தரவு பெற்றதாக நான் கூறும் நிலையில், மேல்முறையீட்டு மனுவை மட்டுமே எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அவ்வாறு எந்தவொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக வாதிக்கு அறிவிப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்ற உத்தரவை வேண்டும் என்றே மாற்றி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.10 18:56:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.